# || ஶ்ரீமத்பகவத்கீதா சுத்த உச்சரிப்பு வழிகாட்டி- நிலை 3 ||

## விசேஷ ஸ்வரங்களும் (உயிரெழுத்துக்கள்) அதன் கால அளவும் (மாத்திரை)

- 'ரு' (ऋ) மற்றும் 'ரூ' (ॠ) என்னும் சமஸ்கிருத உயிர் எழுத்துக்கள் உச்சரிக்கும் சமயத்தில் மெய்யெழுத்துக்களைப் போல் பயன்பட்டாலும் இவை உண்மையில் மெய்யெழுத்துக்கள் அல்ல. இவைகளுக்கு உச்சரிக்கும் கால அளவு (மாத்திரை ) உண்டு. 'ரு' குறில் ஆகவும் 'ரூ' நெடில் ஆகவும் கருதப்படுகின்றன.

## எழுத்துக்களின் கலப்பின் போது (repha)'ர்' ( ˘ , ‸ ) ன் மாத்திரை அளவு

- 'ர்' என்ற எழுத்து, இரண்டு வழிகளில் மெய்யெழுத்துக்களுடன் சேர்ந்து கூட்டெழுத்தாகிறது. அது மெய் எழுத்துக்கு முன் வந்தால், அது கர்ம (कर्म) என்ற வார்த்தையில் வருவது போல, எழுத்துக்களின் மேல் ˘ எனக் காட்டப்படும். அது மெய்யெழுத்துக்குப் பிறகு வந்தால், அது க்ரம (क्रम) என்ற வார்த்தையில் வருவது போல எழுத்துக்கு கீழே ‸ எனக் காட்டப்படும்.

## கூட்டெழுத்துக்களை எழுதும் முறை மற்றும் படிக்கும் முறை -

கூட்டெழுத்துக்கள் தேவநாகரியில் இரு முறைகளில் எழுதப்படுகின்றன.

- முதல் முறையில் 'ஒன்றின் கீழ் மற்றொன்றாக' - முதல் மெய்யெழுத்து மேலேயும், இரண்டாவது மெய்யெழுத்து கீழேயும் சேர்த்து எழுதப்படும். உதா: उद्धव.

- இரண்டாவது முறையில், மெய்யெழுத்துக்கள் எந்த வரிசையில் வருகிறதோ, அதன்படியே எழுதப்படும். இந்த இரண்டு முறையிலும், எந்த எழுத்து முதலாவது வருகிறதோ, அந்த எழுத்து பாதியாகவும் அடுத்த எழுத்து முழுதாகவும் உச்சரிக்கப்படும். உதா:उद् भव.



கீதா பரிவாரின் இலக்கியங்களை பிற இடங்களில் உபயோகிக்க வேண்டியிருந்தால் முன் அனுமதி பெறுவது அவசியமாகும்.

# சந்தி விதிகள்

இரண்டு எழுத்துக்கள் ஒன்றாக சேர்ந்து வரும் போது உண்டாகும் எழுத்துச் சேர்க்கை சந்தி என்று அழைக்கப்படுகிறது. இவ்வாறு இணையும் எழுத்துக்கள் உயிர் எழுத்துக்களாக இருந்தால் அது உயிர் எழுத்துச் சந்தி எனவும் மெய்யெழுத்துக்களாக இருந்தால் மெய்யெழுத்துச் சந்தி எனவும், அனுஸ்வார் ஆக இருந்தால் அனுஸ்வார் சந்தி எனவும், விஸர்கமாக ( : ) இருந்தால் விஸர்க சந்தி என்றும் கூறப்படுகிறது. எழுத்துக்கள் இணைந்த பின் வரும் கூட்டெழுத்தில் ஏதேனும் ஒரு எழுத்திலோ அல்லது இரண்டு எழுத்துக்களிலோ மாறுபாடு உண்டாகலாம். இந்த மாறுபாடு என்ன, அது எப்படி மாறுபடும் என்பதைப் பற்றிய எழுத்துச் சேர்க்கைக்கான விளக்கங்களைத் தெரிந்து கொள்வோம்.

## உயிர் எழுத்து அல்லது ‘அ ’ வர்க சந்தி –

உயிர் எழுத்துச் சந்தி இரு உயிர் எழுத்துக்கள் இணைவதால் உருவாகிறது. இதில் உயிர் எழுத்து மாறுபாடு அடைவதால் இது உயிர் எழுத்து சந்தி எனக் கூறப்படுகிறது. இதில் பல விதங்கள் உள்ளன -

### 1. நெடில் எழுத்துச் சந்தி – दीर्घ सन्धि (‘அ’ வர்கத்தில் நெடில்):

ஒரே வகையான இரு உயிர் எழுத்துக்கள் ஒரே வார்த்தையில் வரும் போது அது நெடில் உயிர் எழுத்தாக மாறுகிறது.

| ஒரே வகையான இரு உயிர் எழுத்துக்கள் | | இரண்டிற் கும் பதிலாக ஒரே ஒரு நெடில் எழுத்து | உதாரணம் |
|---|---|---|---|
| अ/आ (அ / ஆ) | अ/आ (அ /ஆ) | आ (ஆ ) | ப4ய்+அ +அப4யே = ப4யாப4யே (18/30) |
| इ/ई (இ /ஈ ) | इ/ई (இ /ஈ ) | ई (ஈ) | ப்4ரமத்+இ+இவ = ப்4ரமதீவ (1/30) |
| उ/ऊ (உ /ஊ) | उ/ऊ (உ /ஊ) | ऊ (ஊ) | தேஷ்+உ+உபஜாயதே = தேஷூபஜாயாதே (2/62) |
| ऋ/ॠ (ரு /ரூ ) | ऋ/ॠ (ரு /ரூ ) | ॠ (ரூ) | பித்+ரு+ருணம் =பித்ரூணம் (கீதையில் இதற்கான உதாரணம் இல்லை ) |

### 2. குண சந்தி – आद्गुण: (அத் குணஹ)

சந்தி வரக்கூடிய எழுத்துக்களில் முதன்மை எழுத்து ‘அ ’ அல்லது ‘ஆ’ ( अ’ அல்லது ‘आ’ ) ஆக இருக்கையில், இரண்டாம் எழுத்து இ, உ, ரு அல்லது ‘ல்ரு’ ( ‘इ’, ‘उ’, ‘ऋ’ या ‘ऌ’ ) குறில் அல்லது நெடில் எதுவாக இருந்தாலும் அந்த இடத்தில் அதற்கு பதிலாக ஏ, ஓ, ஒள மற்றும் அல் (क्रमशः ‘ए’, ‘ओ’, ‘अर्’ और ‘अल्’) ஆகியவை வரும்.

(஌ என்ற எழுத்து சமஸ்கிருதத்தைத் தவிர வேறு மொழிகளில் கிடையாது. 'லு' என்று புத்தகங்களில் கொடுக்கப்பட்டிருந்தாலும், "ல்ரு" என்று தான் உச்சரிக்க வேண்டும்.)

| ஒன்றாக வரக்கூடிய இரண்டு எழுத்துக்கள் | | இவை இரண்டின் இடத்தில் வருபவை | உதாரணம் |
|---|---|---|---|
| अ/आ (அ /ஆ ) | इ/ई (இ/ஈ ) | ए (ஏ) | விக3த்+அ+இச்சா2 = விக3தேச்சா2 (5/28) |
| | उ/ऊ (உ /ஊ ) | ओ (ஓ) | புர்+ஆ +உவாச = புரோவாச (3/10) |
| | ऋ/ॠ (ரு /ரூ ) | अर् (அர்) | மஹ் +ஆ +ருஷீணாம் = மஹர்ஷீணாம் (10/2) |
| | ऌ (ல்ரு ) | अल् (அல்) | தவ் +அ +ல்ருகாரஹ = தவல்காரஹ (கீதையில் இதற்கு உதாரணம் இல்லை ) |


கீதா பரிவாரின் இலக்கியங்களை பிற இடங்களில் உபயோகிக்க வேண்டியிருந்தால் முன் அனுமதி பெறுவது அவசியமாகும்.

### 3. யண சந்தி - इको यणचि (இகோ யணசி)

சந்தி வரக்கூடிய எழுத்துக்களில் முதன்மை எழுத்து உயிரெழுத்துக்களாகிய 'இ', 'உ', 'ரு' அல்லது 'ல்ரு' இவற்றின் குறில் அல்லது நெடிலாக இருந்து, இரண்டாவது எழுத்து மேலே குறிப்பிட்டவற்றைத் தவிர வேறு ஏதேனும் உயிரெழுத்தாக இருந்தால், அந்த இடத்தில் முதல் எழுத்துக்குப் பதிலாக 'ய்', 'வ்', 'ர்', மற்றும் 'ல்' ஆகிய மெய்யெழுத்துக்கள் இரண்டாம் எழுத்தோடு சேரும்.

| ஒன்றாக ரக்கூடிய இரண்டு த்துக்களில் முதல் எழுத்து | ஒன்றாக வரக்கூடிய இரண்டு முத்துக்களில் இரண்டாவது எழுத்து | ஒன்றாக வரும் போது முதல் எழுத்தின் இடத்தில் ஏற்படும் மாற்றம் | உதாரணம் |
|---|---|---|---|
| इ/ई<br>(இ/ஈ ) | மேலே குறிப்பிட்டவற்றைத் தவிர வேறு உயிரெழுத்து | य् (ய்) | கர்மண்+இ+ஏவ =<br>கர்மண்யேவ (2/47) |
| उ/ऊ<br>(உ /ஊ ) | | व् (வ்) | த்+உ+ஏவாஹம் =<br>த்வேவாஹம் (2/12) |
| ऋ/ॠ<br>(ரு/ரூ) | | र् (ர்) | ஜாக்3+ரு+அதி =<br>ஜாக்3ரதி (2/69) |
| ऌ (ல்ரு ) | | ल् (ல்) | ல்ரு+ஆக்ருதி : =<br>லாக்ருதி :<br>ऌ+आकृति: = लाकृति:<br>(கீதையில் இதற்கு உதாரணம் இல்லை ) |

### 4. வ்ருத்தி சந்தி – वृद्धिरादैच्

சந்தி வரக்கூடிய எழுத்துக்களில் முதன்மை எழுத்து 'அ' அல்லது 'ஆ' மற்றும் இரண்டாவது எழுத்து 'ஏ' , 'ஐ', 'ஓ' அல்லது 'ஔ' ஆக இருந்தால், இவை இரண்டிற்கும் பதிலாக 'ஐ', மற்றும் 'ஔ' ஆகியவை வரும்.

| ஒன்றாக வரக்கூடிய இரண்டு எழுத்துக்களில் முதல் எழுத்து | ஒன்றாக வரக்கூடிய எழுத்துக்களில் இரண்டாவது எழுத்து | இரண்டு எழுத்துக்களிலும் உண்டாகும் வ்ருத்தி சந்தி மாற்றம் | உதாரணம் |
|---|---|---|---|
| अ/आ<br>(அ/ஆ) | ए/ऐ<br>(ஏ/ஐ) | ऐ<br>ஐ | ஸஹஸ்+ஆ+ஏவ =<br>ஸஹஸைவ (1/13) |
| | ओ/औ<br>(ஓ/ஔ) | औ<br>ஔ | ச்+அ+ஔஷதீ4: =<br>சௌஷதீ4: (15/13) |

### 5. அயாதி சந்தி – एचोऽयवायाव:

சந்தி வரக்கூடிய எழுத்துக்களில் முதன்மை எழுத்து 'ஏ' , 'ஐ', 'ஓ' அல்லது 'ஔ' ஆகவும், இரண்டாவது எழுத்து 'ஏதேனும் உயிரெழுத்தாகவும்' இருந்தால், முதல் எழுத்துக்கள் முறையே 'அய்', 'ஆய்', 'அவ்' மற்றும் 'ஆவ்' என மாறி இரண்டாவது எழுத்தோடு சேரும்.

| ஒன்றாக வரக்கூடிய இரண்டு எழுத்துக்களில் முதல் எழுத்து | ஒன்றாக வரக்கூடிய எழுத்துக்களில் இரண்டாவது எழுத்து | இரண்டு எழுத்துக்களிலும் உண்டாகும் அயதி சந்தி மாற்றம் | உதாரணம் |
|---|---|---|---|
| ए (ஏ) | ஏதேனும் உயிரெழுத்து | अय्<br>(அய்) | ராஜர்ஷ்+ஏ+அ: =<br>ராஜர்ஷய: (4/2) |
| ऐ (ஐ) | | आय्<br>(ஆய்) | ந்+ஐ+அகா: = நாயகா:<br>(1/7) |
| ओ (ஓ) | | अव्<br>(அவ்) | மன்+ஓ+ஏ =மனவே<br>(4/1) |
| औ (ஔ) | | आव्<br>(ஆவ்) | த்3வ்+ஔ+இமௌ =<br>த்3வாவிமௌ (15/16) |


கீதா பரிவாரின் இலக்கியங்களை பிற இடங்களில் உபயோகிக்க வேண்டியிருந்தால் முன் அனுமதி பெறுவது அவசியமாகும்.

## 6. பூர்வரூப சந்தி – ஏங: பதா³ந்தாததி

சந்தி நடைபெறும் எழுத்துகளில் முதல் எழுத்து 'ஏ' அல்லது 'ஓ' வாக இருந்து அடுத்த எழுத்து 'அ' வாக இருந்தால் அந்த இடங்களில் முறையே 'ஏ' மற்றும் 'ஓ' வரும். மறைந்த அந்த 'அ' வைக் காண்பிக்க ऽ (அவக்ரஹ) சின்னம் குறிப்பிடப்படுகிறது.

| ஒன்றாக சேரும் வார்த்தையின் முதல் எழுத்து | ஒன்றாக சேரும் வார்த்தையின் இரண்டாவது எழுத்து | இரண்டு எழுத்துகளின் இடத்தில் ஏற்படும் பூர்வரூப மாற்றம் (ஆதேஷ்) | உதாரணம் |
|---|---|---|---|
| ए (ஏ) | अ (அ) | ஏऽ | த்+ஏ+அபி4ஹிதா = தேऽபி4ஹிதா (2/39) |
| ओ (ஓ) | अ (அ) | ஓऽ | த்3ருஷ்ட்+ஓ+அந்த: = த்3ருஷ்டோऽந்த: (2/16) |

# பொதுவான சொற்களஞ்சியம்

- **எழுத்துக்கள் –**

  **உயிர்எழுத்துக்கள் -** அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ரு, ரூ, ஏ, ஐ, ஓ, ஔ

  **மெய் எழுத்துக்கள் -**

  - **கண்ட்ய** - க்1 க்2 க்3 க்4 ங்
  - **தாளவ்ய** - ச்1 ச்2 ஜ3 ஜ்4 ஞ்
  - **மூர்த4ன்ய** - ட்1 ட்2 ட்3 ட்4 ண்
  - **த3ன்த்ய** - த்1 த்2 த்3 த்4 ன்,ந்
  - **ஓஷ்ட்ய** - ப்1 ப்2 ப்3 ப்4 ம்

- **அந்த:ஸ்த2 -** இதனுடைய உச்சரிப்பு நாக்கு, அண்ணம், பல் மற்றும் உதடு இவற்றை தொடும் போது உருவாகின்றன. இதனால் இந்த எழுத்துக்களை வாயின் உள்ளிருந்து உச்சரிக்கும் எழுத்துக்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த எழுத்துக்களை உச்சரிக்கும் போது வாயில் இருந்து எந்தக் காற்றும் வெளி வருவது இல்லை. ய், வ், ர்,ல் அந்த:ஸ்த2 எழுத்துக்கள்.
- **ஊஷ்ம (உஷ்ணம்) -** இந்த எழுத்துக்களை உச்சரிக்கும் போது வாயில் இருந்து ஷ் சப்தம் சற்று வெப்பக் காற்றுடன் வெளி வருகிறது. அதனால் இவைகள் ஊஷ்ம எழுத்துக்கள் என்று அழைக்கப்படுகிறது. ஷ், ஶ், ஸ், ஹ் இவை ஊஷ்ம எழுத்துக்கள்.
- **ம்ருது வ்யஞ்ஜன்(மென்மையான எழுத்துக்கள்) -** 5 வர்க மெய் எழுத்துக்கள் வரிசையில் 3, 4, 5 வது எழுத்துக்கள் (க்3, க்4, ங், ஜ், ச்4, ஞ், ட்3, ட்4,,ண், த்3, த்4, ன், ப்3, ப்4, ம் எழுத்துக்கள்), அந்த:ஸ்த (ய், ர், ல், வ் மற்றும் ஹ்) இவை ம்ருது வ்யஞ்ஜன் என்று அழைக்கப்படுகின்றன.
- **கடோர் வ்யஞ்ஜன் (வல்லின எழுத்துக்கள்) –** 5 வர்க்க எழுத்துக்களில் முதல் மற்றும் இரண்டாம் எழுத்துக்கள் (க்1, க்2, ச்1, ச்2, ட்1, ட் 2, த்1, த்2, ப்1, ப்2 )மற்றும் ஷ், ஶ், ஸ் இவை கடோ3ர் வ்யஞ்ஜன் (வல்லின எழுத்துக்கள்) என்று அழைக்கப்படுகின்றன.
- **அல்பப்ராண் வ்யஞ்ஜன் -** சில மெய் எழுத்துக்களை உச்சரிக்கும் போது வாயில் இருந்து சுவாசிக்கும் காற்று குறைந்த மாத்திரை அளவில் வெளியில் வருகிறது. அதை அல்பப்ராண் வ்யஞ்ஜன் என்று அழைக்கிறோம். க1, க3, ங, ச1, ஜ3, ஞ, ட1, ட3, ண, த1,த3, ந, ன, ப1, ப3, ம, ய, ர, ல ,வ
- **மஹாப்ராண் வ்யஞ்ஜன் -** சில மெய் எழுத்துக்களை உச்சரிக்கும் போது அதிக முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறது மற்றும் சற்று அதிகமான காற்றும் வெளியே வருகிறது. அதை நாம் மஹாப்ராண் வ்யஞ்ஜன் என்று அழைக்கிறோம். க2, க4, ச2, ஜ4, ட2, ட4, த2, த4, ப2, ப4, ஶ, ஷ, ஸ, ஹ
- **ஜிஹ்வாமூலீய -** க1 மற்றும் க2 இந்த எழுத்துகளுக்கு முன்னால் உள்ள வார்த்தையில் விஸர்கம் வரும்போது அந்த விஸர்கத்தை ஜிஹ்வாமூலீய (க்2) என்று அழைக்கிறோம். அதை க்2 போல உச்சரிக்க வேண்டும் .

- **உபத்4மானீய-** ப1 , ப2 இந்த எழுத்துக்களுக்கு முன்னால் உள்ள வார்த்தையில் விஸர்கம் வரும்போது அந்த விஸர்கத்தை உபத்3மானீய என்று அழைக்கிறோம். அதை ஃப் என்று உச்சரிக்க வேண்டும்.

|| இதி ||


கீதா பரிவாரின் இலக்கியங்களை பிற இடங்களில் உபயோகிக்க வேண்டியிருந்தால் முன் அனுமதி பெறுவது அவசியமாகும்.